செ.வெ.எண்: 86 நாள்: 25.11.2026

பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் உறுப்பினர்களாக பதிவு பெற்றவர்களின் மகன்/மகள் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகள், தொழிற்கல்வி படிப்புகள், பட்டயப்படிப்புகள் படித்தால் கல்வி உதவித்தொகையும், மேலும், திருமண உதவித்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகையும், காசநோய், புற்றுநோய், எய்ட்ஸ், டையாலிசிஸ் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நேர்வில், தகுதியான கூடுதல் பயனாளிகள் தேர்வு செய்யும் பொருட்டு 27.11.2026 அன்று சரகவாரியாக சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. எனவே, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக பதிவு பெற்றவர்கள் மேற்படி உதவித்தொகை பெற தங்கள் பகுதிக்குட்பட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை அணுகி அசல் ஆவணங்களுடன் மனுவினை அளித்து பயன் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் சிறப்பு முகாம்களில் ஒன்றரை வருடத்திற்குள் ஏற்பட்ட இயற்கை மரண நிகழ்வுகளுக்கும் விண்ணப்பித்து பயன்பெறலாம் என திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு.வ.மோகனச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவாரூர் மாவட்டம்